திரு. ஆ. பரந்தாமன்: தலைவரவர்களே, கள்ளநோட்டுகளை அச்சடிப்பவர்களுக்கு இயந்திரமும் காகிதமும் எங்கே இருந்து வருகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அந்த விபரங்களை அறிய உறுப்பினர் அவர்கள் ஏன் ஆர்வம் காட்டுகிறார் என்று தெரியவில்லை. ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு).

Employees transferred from Travancore–Cochin

* 891 Q.—THIRU R. PONNAPPA NADAR: Will the Hon. the Chief Minister be pleased to state:

(a) whether all the conditions of service applicable prior to 1–11–1956 to Travancore–Cochin transferred personnel in respect of G.O. Ms. No. 2865, dated 21–12–1970 have been implemented; and

(b) whether promotions were given on strict seniority irrespective of age restriction?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) நிபந்தனைகள் செயல்படுத்தப் பட்டு வருகின்றன.

(இ) விதிகளின்கீழ் பதவி உயர்வுகள் அளிக்கப்பட்டன.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் தமிழ் நாட்டுடன் இணைந்து சுமார் 16 ஆண்டுகள் ஆகியும், இதுவரையிலும் அரசு அலுவலில் இருந்தவர்களுக்கு சர்விஸ் இணைப்பு பல இலாக்காக்களில் நடை பெறவில்லை. ஆகவே, இதற்குத் தனியாக ஒரு அதிகாரியை நியமித்து சரியான முறையில் சர்விஸ் இணைப்பு அளிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எல்லாத் துறைகளிலும் சேர்ந்து தமிழ்நாடு முழுவதும் 7,430 பேர் இருக்கிறார்கள். அவர்களில் 30 பேர் தலைமைச் செயலகத்தில் இருக்கிறார்கள். எல்லோருக்கும் தகுதியின் அடிப் படையில் பதவி உயர்வுகள் முறைப்படி அளிக்கப்பட்டு வருகின்றன. ஒருசில துறைகளில் மட்டும் பதவி உயர்வு அளிப்பது இன்னும் முடிவுபெறவில்லை. வேறு பிரச்சனைகள் இதில் அதிகமாக இல்லை.